சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில், நேற்று (20.01.2026) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாநில எழுத்தறிவு விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.சந்தர மோகன், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் முனைவர். ச.சுகன்யா, இணை இயக்குநர் முனைவர். பொன்.குமார், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்கொண்டார்!

சென்னை, ஜன.21- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-67, பேப்பர் மில்ஸ் சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் வார்டு அலுவலகக் கட்டடப் பணியினை 19.01.2026 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-74க்குட்பட்ட சந்திர யோகி சமாதி சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடம், வார்டு-76, செல்லப்பா தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், வார்டு-78க்குட்பட்ட தானா தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், நியமனக் குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முடிச்சூர் ஊராட்சியில் புனிததோமையர் மலை வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சுனில்மேத்யு ஏற்பாட்டில் "சமத்துவ பொங்கல் விழா" மற்றும் மாபெரும் கோலம் போட்டி நடைபெற்றது. கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு குளிர்சாதனப் பெட்டி, இரண்டாம் பரிசு துணி துவைக்கும் இயந்திரம், மூன்றாம் பரிசு பீரோ மற்றும் ஆறுதல் பரிசு 100 பேருக்கு பம்மல் வடக்கு பகுதி செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் வழங்கினார். இதில் விநாயகமூர்த்தி, கே.வி.ஜெமீன், சங்கர் சந்திரன், தனசேகரன், ரஞ்சித் சிங், அமிர்தலிங்கம், கவுல்பஜார் பாஸ்கர், ஸ்ரீதர் மற்றும் சாலமோன்,ஜெபக்குமார், அரசு, ரஞ்சித், ரமேஷ்,சதிஷ், சீனிவாசன், ராஜ், பைலட், மனோஜ், ஆனந்த், கலைசெழியன், கர்ணன், விக்னேஷ், நூர் முகமது சதீஷ்குமார் மற்றும் இளைஞர் அணி சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானவர் கலந்து கொண்டனர்.